# படக்கதைகள்



# உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

# பொருளடக்கம்


| வ .எண் | தலைப்பு | ப.எண் |
|---|---|---|
| 1. | தவளையும் கொக்கும் | 01 |
| 2. | புலித் தோல் போர்த்திய கழுதை | 03 |
| 3. | எறும்பும் புறாவும் | 05 |
| 4. | விவசாயியும் கழுதையும் | 07 |
| 5. | எறும்பும் வெட்டுக்கிளியும் | 09 |
| 6. | நரியின் தந்திரம் | 11 |
| 7 | இரண்டு நண்பர்கள் | 13 |
| 8. | குரங்கும் முதலையும் | 15 |
| 9. | நன்றியுள்ள கீரிப்பிள்ளை | 17 |
| 10. | நரியும் கொக்கும் | 19 |



# தவளையும் கொக்கும்

ஒரு காட்டின் நடுவே அழகிய சிறிய குளம் இருந்தது. அந்தக் குளத்தில் தவளை ஒன்று வசித்து வந்தது. தினமும் தண்ணீர் குடிக்க கொக்கு ஒன்று அந்த குளத்திற்கு வரும். கொக்கும், தவளையும் நெருங்கிய நண்பர்களாக இருந்தனர். கொக்கு தினமும் தவளையைச் சந்தித்து தான் சென்ற இடங்களைப் பற்றிக் கூறும். இருவரும் ஒருவருக்கொருவர் பேசி சந்தோசம் அடைவர்.

சில நாட்கள் சென்றன. கோடைக்காலம் வந்தது. குளத்தில் இருந்த தண்ணீர் வற்றத் தொடங்கியது. தவளை அதனால் மிகவும் வருந்தியது." கொக்கிடம் தண்ணீர் வற்றிவிட்டால் நான் இறந்துவிடுவேன்" என்று கூறி அழுதது. கொக்கும் "நண்பனே! நீ கவலைப் படாதே, நான் உனக்கு உதவி செய்கிறேன்" என்றது. இங்கு இருந்து சற்றுத் தொலைவில் நீர் நிறைந்த பெரிய குளம் இருக்கிறது. நான் உன்னை அங்கு அழைத்துச் செல்கிறேன் என்று கூறியது. தவளையோ! "நான் அங்கு எப்படி வருவது?" என்று கொக்கிடம் கேட்டது. அதற்கு கொக்கு ஒரு நீண்ட குச்சி ஒன்றை எடுத்தது. அந்தக் குச்சியின் ஒரு பக்கத்தினை தவளையை நன்றாகப் பிடிக்கச் செய்து, மறு பக்கத்தினை கொக்கு தன் கால்களால் இறுக்கமாகப் பிடித்துக் கொண்டு பறந்தது. இருவரும் அக்குளத்தினைச் சென்று அடைந்தனர்.



**சூழ்நிலை அறிந்து உதவும் நண்பனே உற்ற தோழன்.**



# புலித் தோல் போர்த்திய கழுதை

ஒரு கிராமத்தில் வேலன் என்பவனிடம் கழுதை ஒன்று இருந்தது. கழுதைக்குச் சரியாக உணவு அளிக்க முடியவில்லை. அவன் என்ன செய்வது? என்று தெரியாமல் அக்கழுதையின் அருகில் நின்று புலம்பினான். அடுத்த நாள் அவன் மலையடிவாரம் நோக்கிச் சென்று கொண்டு இருந்தான். செல்லும் வழியில் ஒரு புலி இறந்து கிடந்தது. வேலன் புலியின் தோலை மட்டும் வீட்டிற்கு எடுத்து வந்தான். அந்த தோலை இரவில் அவனுடைய கழுதையின் மேல் போட்டான். பின் அக்கழுதையை வயலில் மேய விட்டான். வயலுக்கு சொந்தக்காரர் புலி என்று எண்ணினார். எனவே அவற்றிக்குப் பயந்து ஓடிவிட்டார்.

இவ்வாறே தொடர்ந்து சில நாள்கள் சென்றன. கழுதையும் நன்றாக வயலில் உள்ளவற்றைச் சாப்பிட்டுக் கொழு கொழுவென மாறியது. ஒரு நாள் இரவு கழுதை வயலில் மேய்ந்து கொண்டு இருக்கும் போது அவற்றைப் புலி என எண்ணி ஒளிந்து கொண்டார் உரிமையாளர். அந்தப் பக்கம் வந்த கழுதை ஒன்று கத்தியது. அந்தச் சத்தம் கேட்டதும் புலித் தோல் போர்த்திய கழுதையும் கத்தத் தொடங்கியது. உடனே வயலின் சொந்தக்காரர் அந்தக் கழுதையை அடி அடி என்று அடித்துவிட்டார். கழுதையோ வலி தாங்காமல் இறந்தது.



**நாம் என்றும் நேர்மையாகச் செயல்பட வேண்டும்.**



# எறும்பும் புறாவும்

ஒரு நதிக்கரையின் அருகில் எறும்பு ஒன்று சென்று கொண்டிருந்தது. அப்பொழுது திடீரென காற்று வேகமாக வீசியது. இதனால் எறும்பு ஓடும் நீரில் விழுந்து விட்டது. உடனே எறும்பு உதவிக்காக அலறியது. “யாராவது எனக்கு உதவி செய்யுங்கள்”,“ என்னைக் காப்பாற்றுங்கள்” என்று கத்தியது. அந்தப் பக்கமாக வந்த புறா அவற்றைக் கண்டு சற்றுத் திகைத்தது. பின் ஓர் இலையைப் பறித்து ஓடும் நீரில் போட்டது. எறும்பு தப்பித்து கரைக்கு வந்தது. அவற்றைக் கண்ட புறா மகிழ்ச்சி அடைந்தது.

பின்பு ஒருநாள் வேடன் ஒருவன் வேட்டையாட காட்டிற்கு வந்தான். அங்கு அந்த புறாவைக் கண்டான். உடனே அவற்றை வேட்டையாட எண்ணி வைத்திருந்த வில்லில் அம்பைத் தொடுத்துக் குறி வைத்தான். இவற்றை எறும்பு கண்டது. உடனே அவன் அருகில் சென்று காலில் கடித்தது. அவன் வலியால் கத்தினான். அவ்வேடனின் குறி தவறியது. வேடன் கத்திய சத்தத்தைக் கேட்ட புறா தப்பித்து வானில் பறந்தது. பிறகு புறா எறும்பிற்கு நன்றி கூறியது. பின் இருவரும் நல்ல நண்பர்கள் ஆனார்கள்.



**ஒரு நல்ல செயல் மற்றொரு நல்ல செயலுக்கு வழிவகுக்கும்.**



# விவசாயியும் கழுதையும்

ஓர் ஊரில் விவசாயி ஒருவர் கழுதையை வளர்த்து வந்தார். அதனைச் சந்தைக்குப் பொருட்களைச் சுமந்து செல்லப் பயன்படுத்தினார். ஒரு நாள் விவசாயி தனது மகன் மற்றும் கழுதையுடன் சந்தைக்குச் சென்று கொண்டு இருந்தார். செல்லும் வழியில் விவசாயியைப் பார்த்து, "அதான் கழுதை இருக்கிறதே! பிறகு ஏன் நீங்கள் நடந்து செல்கிறீர்கள்?" என்று கேட்டார் ஒருவர். பின் விவசாயி கழுதையின் மேல் அமர்ந்து கொண்டார். அவரது மகன் நடந்து வந்தான். சிறிது தூரம் சென்றனர். அப்பொழுது ஒரு பெண் "சின்ன பையன் நடந்து வருகிறான், நீங்கள் கழுதையின் மேல் வருகிறீர்கள்" நீங்கள் நன்றாகத்தானே உள்ளீர்கள்?" என்று கூறினாள். அடுத்து விவசாயி தனது மகனை கழுதையின் மேல் அமரச் செய்தார்.

மேலும் சிறிது தூரம் சென்றனர். அங்கு ஒரு பெண்மணி விவசாயியைப் பார்த்து "ஏன் நீங்கள் நடந்து வருகிறீர்கள், இருவரும் கழுதையின் மேல் வரலாமே?" என்று கூறிச் சென்றாள். அடுத்து இருவருமே கழுதையின் மேல் அமர்ந்து வந்தனர். மற்றொருவர் அவர்கள் வருவதைப் பார்த்து "பாவம் கழுதை! இவ்வளவு சுமையா! கழுதை எவ்வளவு களைப்புடன் காணப்படுகிறது" என்றார். விவசாயிக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை? இறுதியில் விவசாயி கழுதையைத் தூக்கிச் சென்றார். செல்லும் வழியில் கல் தடுக்கியது. கழுதை அருகில் இருந்த தண்ணீரில் விழுந்தது. இறுதியில் கழுதை நம் இருவருக்குமே பயன்படவில்லை. நாம் மற்றவர்கள் பேச்சைக் கேட்டு நமது நேரத்தை வீணாக்கிவிட்டோம் என்றும், "கழுதையின் மேல் மகன் சிறிது தூரமும் விவசாயி சிறிது தூரமும் அமர்ந்து சென்றாலே சந்தைக்கு சென்று இருக்கலாம்" என்று எண்ணி வருத்தப்பட்டனர்..



**நாம் எப்பொழுதும் சுயமாகச் சிந்தித்து முடிவுகளை மேற்கொள்ள வேண்டும்.**



# எறும்பும் வெட்டுக்கிளியும்

கோடைகாலத்தில், வெட்டுக்கிளி ஒன்று அங்கும் இங்குமாய் குதித்து விளையாடியது. அந்த வழியில் எறும்பு அதன் உணவுகளைச் சேகரித்து அவற்றைச் சுமந்து சென்றது. அதைப் பார்த்த வெட்டுக்கிளி எறும்பிடம், “இப்போது என்ன அவசரம் சிறிது நேரம் என்னைப் போல நீயும் என்னுடன் விளையாடலாமே?” என்றது. அதற்கு எறும்பு “இன்னும் சில நாள் கழித்து மழைக்காலம் ஆரம்பித்து விடும் அச்சமயம் வீட்டை விட்டு வெளியே வர முடியாதே!” என்றது. அதற்கு வெட்டுக்கிளி எறும்பிடம் மழைக்காலம் வர இன்னும் நாட்கள் இருக்கிறது. நான் விளையாடப் போகிறேன் என்று சிரித்துக் கொண்டே சென்றது.

சில நாட்கள் கடந்தன. மழைக்காலம் வந்தது. எறும்போ தான் சேகரித்த உணவைத் தன் வீட்டில் உண்டு மகிழ்ந்தது. ஆனால் வெட்டுக்கிளியோ உண்ண உணவின்றி மழையில் சுற்றித் திரிந்தது. அப்போது வெட்டுக்கிளி, “எறும்பு உணவு சேகரித்து வைத்து இருக்கும், அதனிடம் கேட்டால் என்ன?” என்று எண்ணியது. வெட்டுக்கிளி எறும்பின் வீட்டிற்கு வந்தது. எனக்கு மிகவும் பசிக்கிறது. ஏதேனும் உணவு தருகிறாயா? எனக் கேட்டது. எறும்பும் தன்னிடம் உள்ள உணவில் சிறிதளவு வெட்டுக்கிளிக்கு அளித்தது. “அன்று என்னைப் பார்த்து சிரித்தாயே, இப்போது நான் சேகரித்த உணவு தான் இன்று நாம் இருவருக்கும் உதவியது” என்று கூறியது. இனி “நீ சோம்பலில்லாமல் வெயில் காலத்தில் மழைக்காலத்திற்கு வேண்டியவற்றைச் சேமித்துக் கொள்” என்றது.



**காலத்திற்கு ஏற்ப நாம் உழைக்க வேண்டும்**




# நரியின் தந்திரம்

ஓர் அடர்ந்தக் காட்டில் பல விலங்குகள் வசித்து வந்தன. குள்ள நரி ஒன்று தாகமாக இருந்தது. தண்ணீர் தேடி அலைந்தது. அப்பொழுது ஒரு தொட்டியைப் பார்த்தது. அதில் உள்ள தண்ணீரைக் குடிக்க முயன்றது. அந்தத் தொட்டியில் நீலநிறச் சாயம் கலந்த தண்ணீர் இருந்தது. குள்ள நரி அந்தத் தொட்டியில் தவறி விழுந்தது. குள்ள நரி தொட்டியை விட்டு வெளியே வந்தது. நரியின் உடல் முழுவதும் நீலநிறச் சாயம் ஒட்டிக் கொண்டது.

நரியின் தோற்றத்தைப் பார்த்த மற்ற விலங்குகள் பயந்தன. நரியும் “இனி நான் தான் காட்டுக்கு ராஜா” என்று கூறியது. மற்ற விலங்குகள் நீலநிறத்தில் வித்தியாசமாக இருப்பதைக் கண்டு நரியை ராஜா என எண்ணியது. நரியும் மற்ற விலங்குகளை, தனக்கு வேண்டிய அனைத்தையும் செய்ய வைத்தது. மேலும் அனைத்து விலங்குகளும் நரிக்குத் தேவையான உணவுகளை எடுத்து வந்தன. ஒரு நாள் திடீரென மழை பெய்தது. மழையில் நரியின் மேல் இருந்த சாயம் கரைந்தது. நரி அதன் உண்மையான தோற்றத்திற்கு வந்தது. மற்ற விலங்குகள் நரியைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தன. இத்தனை நாள் நாம் ஏமாற்றப்பட்டதை எண்ணி கோபம் அடைந்தன. எனவே அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து நரியை அடித்தனர்.



**நாம் செய்த தவறு ஒரு நாள் வெளிப்படும்.**




# இரண்டு நண்பர்கள்

ராமுவும் சோமுவும் நெருங்கிய நண்பர்கள். ஒரு நாள் நண்பர்கள் இருவரும் காட்டின் வழியாகச் சென்று கொண்டிருந்தனர். அப்பொழுது புலியின் உறுமல் சத்தம் கேட்டது. இருவரும் அங்கும் இங்கும் ஓடினர். புலி மிகவும் அருகில் வந்தது. சோமுவிற்கு மரம் ஏறத் தெரியும் எனவே வேகமாக மரத்தில் ஏறினான். ஆனால் ராமுவிற்கு மரம் ஏறச் தெரியாது. தன்னைக் காப்பாற்றும்படி சோமுவிடம் கேட்டான். சோமு தன்னால் இயலாது என்று கூறினான். ராமு என்ன செய்யவேண்டும் என்று தெரியாமல் திகைத்தான். பின் அவனுக்கு இறந்த உடலை விலங்குகள் உண்ணாது என்ற எண்ணம் வந்தது. உடனே அவன் தரையில் படுத்துக்கொண்டு இறந்தது போல் நடித்தான். சிறிது நேரம் அவன் மூச்சை வெளியில் விடாமல் உள்ளே அடக்கிக் கொண்டான். புலியும் அவன் அருகில் வந்து நுகர்ந்து பார்த்தது. அவன் இறந்து விட்டதாக எண்ணி புலி சென்று விட்டது. புலி சென்ற பிறகு சோமு மரத்தை விட்டு இறங்கினான். சோமு ராமுவைப் பார்த்து” புலி உன் காதில் என்ன சொன்னது?” என்று கேட்டான். அதற்கு ராமு “ஆபத்தில் உதவாத நண்பனை நம்பாதே என்றது” என்று கூறினான்.



**ஆபத்தில் இருக்கும் போது நாம் மற்றவர்களுக்கு உதவ வேண்டும்.**



# குரங்கும் முதலையும்

நதிக் கரையின் ஓரத்தில் நாவல்மரம் ஒன்று இருந்தது. அம்மரத்தின் பழங்கள் மிகவும் சுவையாக இருக்கும். குரங்கு ஒன்று தினமும் அம்மரக்கிளையில் அமர்ந்து பழங்களைச் சுவைத்துச் சாப்பிடும். அவற்றை ஒரு முதலை ஒன்று பார்த்தது. முதலைப் பார்ப்பதைப் பார்த்துக் குரங்கு "நண்பனே! நீயும் நாவற்பழம் சாப்பிடுகிறாயா?" என்று கேட்டு, முதலைக்கும் கொஞ்சம் பழங்களைக் கொடுத்தது. முதலைக்கும் அந்தப் பழம் மிகவும் பிடித்து இருந்தது. பின் இருவரும் நண்பர்கள் ஆனார்கள்.

சில நாட்கள் சென்றன. ஒரு நாள் முதலை தன் மனைவியிடம் நாவற்பழத்தின் சுவையையும் குரங்கு நண்பனின் நட்பையும் பெருமையாகக் கூறியது. அதைக் கேட்ட முதலையின் மனைவி "அந்தப் பழமே இவ்வளவு சுவையாக இருக்கும் போது அதை உண்ணும் அக்குரங்கின் இதயம் எவ்வளவு சுவையாக இருக்கும்" என்று கூறியது . மனைவியின் வற்புறுத்தலால் முதலை குரங்கை தன் வீட்டிற்கு விருந்திற்கு அழைத்தது. செல்லும் வழியில் முதலை தன் மனைவி கூறியதை குரங்கிடம் கூறியது. அதைக் கேட்ட குரங்கு திகைத்தது. "அடடே! நண்பா, நான் என் இதயத்தை அந்த நாவல்மரத்திலேயே வைத்துவிட்டேனே, நீ முன்பே கூறியிருந்தால் நாம் அதை உன் மனைவிக்காக எடுத்து வந்துருக்கலாமே?" என்று குரங்கு முதலையிடம் கூறியது. அதைக் கேட்ட முதலை இதயத்தை எடுத்துச் செல்லலாம் என்று கூறி கரையின் பக்கம் வந்தது. உடனே குரங்கு முதலையின் மேல் இருந்து கரையை நோக்கி ஒரே தாவாக தாவியது. பின் குரங்கு முதலையைப் பார்த்து "உனது உண்மையான குணம் எனக்குத் தெரிந்து விட்டது". இனிமேல் இந்த நாவல்மரத்தடிக்கு வராதே! என்று கூறிவிட்டது.



**ஒருவன் மற்றவர்களை ஏமாற்ற நினைத்தால் கண்டிப்பாக ஒரு நாள் எல்லாவற்றையும் இழந்து ஏமாறுவான்**





# நன்றியுள்ள கீரிப்பிள்ளை


ஓர் ஊரில் கணவனும் மனைவியும் இருந்தனர். அவர்களுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அவர்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர். ஒரு நாள் கணவர் வேலைக்குச் செல்லும் வழியில் ஒரு சின்னக் கீரிப்பிள்ளையைப் பார்த்தார். அந்தக் கீரிப்பிள்ளையைத் தனது வீட்டிற்கு எடுத்து வந்து தன் மனைவியிடம் அளித்தார். மனைவியும் நம் பிள்ளையுடன் சேர்த்து இந்த கீரிப்பிள்ளையையும் நான் வளர்க்கிறேன் என்றாள். அந்த கீரிப்பிள்ளைக்கு உணவு வழங்கினாள்.'

சில நாட்கள் சென்றன. மனைவி தண்ணீர் எடுப்பதற்கு ஆற்றங் கரைக்குச் சென்றாள். அவள் சென்ற பின் வீட்டுக்குள் பாம்பு வந்தது. வீட்டில் குழந்தை தொட்டிலில் தனியாக தூங்கிக் கொண்டு இருந்தது. கீரிப்பிள்ளை குழந்தையைக் காப்பாற்ற எண்ணி பாம்பிடம் சண்டைப் போட்டது. இறுதியில் பாம்பைக் கொன்று விட்டது. நாம் குழந்தையை காப்பாற்றிவிட்டோம் என்று பெருமையாக எண்ணியது. கீரிப்பிள்ளை ஆற்றங்கரைக்குச் சென்ற மனைவியைப் பார்க்கச் சென்றது. ஆனால் வாயில் இரத்தக் கரையைப் பார்த்த மனைவி கீரிப்பிள்ளை தன் மகனைக் கொன்றுவிட்டது என்று நினைத்துவிட்டாள். உடனே அருகில் இருந்த கட்டையை எடுத்து கீரிப்பிள்ளையை அடித்தாள். கீரிப்பிள்ளை இறந்து விட்டது. வீட்டிற்கு வேகமாகச் சென்று குழந்தையைப் பார்த்து அதிர்ச்சியானாள். குழந்தை தொட்டிலில் அமைதியாகத் தூங்கிக் கொண்டு இருந்தது. பின் குழந்தையைச் சுற்றிப் பார்த்தாள். குழந்தைக்கு அருகில் பாம்பு ஒன்று இறந்து கிடந்தது. அப்பொழுதுதான் அவளுக்கு என்ன நடந்தது என்ற உண்மை புரிந்தது."கீரிப்பிள்ளை தன் குழந்தையைக் காப்பாற்றவே பாம்பைக் கொன்று உள்ளது அதன் வாயிலிருந்த இரத்தம் பாம்பின் இரத்தம் என்று", அவசரப்பட்டு கீரிப்பிள்ளையைக் கொன்று விட்டோமே! என்று மிகவும் வருந்தினாள்.



**நாம் எப்பொழுதும் அவசரத்தில் முடிவுகளை எடுக்கக் கூடாது.**


# நரியும் கொக்கும்

ஒரு காட்டில் பல மிருகங்கள் வாழ்ந்து வந்தன. அங்கு ஒரு நரி எப்போதும் மற்ற மிருகங்களை ஏமாற்றி அவற்றைக் கண்டு மகிழ்ச்சி அடையும். அதே காட்டில் மிகவும் அறிவுள்ள, மற்ற விலங்குகளின் அன்பைப் பெற்ற கொக்கு இருந்தது. ஒரு நாள் நரி, கொக்கை ஏமாற்ற எண்ணியது. எனவே கொக்கை நரி விருந்திற்கு அழைத்தது. கொக்கும் வர சம்மதித்தது. நரி விருந்திற்கு சூப் ஒன்றைத் தயாரித்தது. அச்சூப்பை தட்டையானத் தட்டில் வைத்தது. கொக்கினால் அவற்றைக் குடிக்க முடியவில்லை. ஆனால் நரி அவற்றை நக்கி நக்கி குடித்துவிட்டு, " இந்தச் சூப்பை உனக்காகச் செய்தேன். எப்படி இருக்கிறது?" எனச் சிரித்துக் கொண்டே கேட்டது. கொக்கு ஏமாற்றப்பட்டதை உணர்ந்தது. நரியிடம் "நண்பனே! சூப் மிகவும் ருசியாக இருந்தது" என்று சொல்லியது. “இரவு நேரம் ஆகப் போகிறது, நான் செல்ல வேண்டும்” என்றது. செல்லும் முன் “இன்று நீ எனக்கு விருந்து வைத்தாய், பதிலுக்கு நான் நாளை உனக்கு விருந்து வைக்க விரும்புகிறேன். உன்னால் வர முடியுமா?” என்று கேட்டது. நரியும் வர சம்மதித்தது. நரி கொக்கை ஏமாற்றிய சந்தோசத்தில் இருந்தது.

அடுத்த நாள் கொக்கு பல இறைச்சிகளைக் கொண்டு சுவையான சூப் ஒன்றைத் தயாரித்தது. அவற்றின் மணம் காடு முழுவதும் பரவியது. நரியோ மிகவும் ஆர்வமாக சூப்பைக் குடிக்க வந்தது. ஆனால் கொக்கு மிகவும் வாய் குறுகிய குவளையில் சூப்பை வைத்து நரிக்குத் தந்தது. நரியால் அந்தச் சூப்பைக் குடிக்க முடியவில்லை. கொக்கு நரியைப் பார்த்து “சூப் எப்படி இருக்கு?” என்று கேட்டது. நரியும் “சூப்பின் வாசனை அருமையாக உள்ளது. ஆனால் என்னால் குடிக்க முடியவில்லை என்று வருத்தத்துடன் தெரிவித்தது. மேலும் கொக்கிடம் மன்னிப்புக் கேட்டு, தன் தவறைத் திருத்திக்கொண்டது. கொக்கும் நரியும் பின் நண்பர்கள் ஆனார்கள். இறுதியில் சூப்பை இருவரும் சேர்ந்து குடித்தார்கள்.



**நாம் யாரையும் ஏமாற்றக் கூடாது.**

படம், பார்ப்பவற்கு மனதில் மகிழ்ச்சியை உண்டாக்கும். குழந்தைகள் குதூகலம் அடைவார்கள். படக்கதை ஒவ்வொருவருக்கும் புதிய புதியக் கதைகளை உருவாக்கித்தரும். இந்தப் "படக்கதைகள்' புத்தகத்தைப் படிப்பதன் மூலம் கதையுடன் நல்ல பண்புகளையும் கற்றுக் கொள்ளலாம். படம் கதையை மட்டுமல்ல நல்ல வாழ்வியலையும் வழங்குகிறது.

